**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி.R.சுஜாதா, பி.எஸ்.சி., எல்.எல்.எம்.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ஆம் நாள் புதன்கிழமை

**2057 திருவள்ளுவர் ஆண்டு பரபாவ வருடம் சித்திரை திங்கள் 02 ம் நாள்**

**அசல் வழக்கு எண்.207/2025**

**TNCB-13000238-2025**

V.P. செல்வராஜ் ... வாதி

/ எதிர் /

ராமலிங்கம் ... பிரதிவாதி

இவ்வழக்கானது கடந்த 16.03.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.Su.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும் வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வாதுரையைக் கேட்டும், இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில், இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

வாதியும் பிரதிவாதியும் தாவாச்சொத்து பொறுத்து 16.08.2001 தேதியன்று செய்து கொண்டுள்ள கிரைய ஒப்பந்தம் சட்டப்படி செல்லாது நிறைவேற்றகூடியது அல்ல என்று ஒரு விளம்புகை பரிகாரம் கோரியும் மற்றும் இதர பரிகாரங்களும் கோரியும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VII விதி 1 ன்படி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>வழக்குரையின் சுருக்கம்</u>** :

தாவாச் சொத்தினை 16.09.1985 அன்று திருமதி.K.மணிமேகலையிடம் வாதி கிரயம் பெற்றபொழுது காலி மனையிடமாக கிரயம் பெற்று பின்னிட்டு, வாதி அந்த காலி மனையிடத்தில் ஒரு வில்லை வீடு தனது சொந்த செலவில் கட்டி, அதில் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார். மேற்படி வீடு அமைந்துள்ள மாக்கினாம்பட்டி ஊராட்சிக்கு வாதி பெயரில் நாளது தேதி வரை சொத்து வரி செலுத்தி வருகிறார். மேலும் வாதி வீட்டிற்கு எ பெயரில் மின் இணைப்பும், குடிநீர் இணைப்பும் பெற்றும், அதன் பயன்பாட்டிற்கான கட்டணத்தையும் வாதி பெயரில் நாளது தேதி வரை செலுத்தி வருகிறார். ஆகையால் தாவாச் சொத்து என்பது குடியிருப்பு வீடும், அதனுடன் சேர்ந்த காலியிடமும் கொண்டதாகும். வாதியும், பிரதிவாதியும் கடந்த 16.08.2001 என்று தாவாச் சொத்தினை பொறுத்து விற்பனை செய்வதற்காக கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு அதனை பொள்ளாச்சி சார்-பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் எண்.3109/2009 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி கிரய ஒப்பந்தத்தின் அசலை பிரதிவாதியும், அதன் ஒளி நகலை வாதியும் வைத்துக் கொண்டார்கள். அதற்கான குறிப்பு மேற்படி கிரய ஒப்பந்தத்திலேயே எழுதப்பட்டுள்ளது.

(2.2) மேற்படி கிரய ஒப்பந்தத்தில் தாவாச்சொத்தின் கிரய மதிப்பு ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) என்றும், கிரய முன்தொகை ரூ.1,45,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்தைந்தாயிரம் மட்டும்) என்றும் கிரயத்திற்கான காலக்கெடு 12(பனிரெண்டு) மாதங்கள் என்றும், வாதிக்கு பிரதிவாதி கிரய காலக்கெடுவிற்குள் மீதி கிரயத் தொகையை செலுத்தி வாதி செலவில் சொத்தினை கிரயம் பெற்றுக்கொள்ள வேண்டியது

என்றும், வாதி அதற்கான கிரயப்பத்திரத்தை எழுதி கொடுத்து வில்லங்க சுத்தியாக சொத்தினை சுவாதீனம் கொடுக்க வேண்டியது என்றும், மேலும் வாதி கிரய காலக்கெடுவிற்குள் பிரதிவாதி சொத்தினை கிரயம் செய்து கொள்ள தயாராக இருந்தும், அவருக்கு கிரயம் செய்து கொடுக்க முன்வராவிட்டால் பிரதிவாதி கிரய ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து சொத்தினை கிரயம் செய்து கொள்ள வேண்டியது என்றும், வாதி கிரய காலக் கெடுவிற்குள் சொத்தினை பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுக்க தயாராக இருந்தும், பிரதிவாதி கிரயம் பெற்றுக் கொள்ள முன்வரவில்லை என்றால், அவர் செலுத்தியுள்ள மீதி கிரயத் தொகையில் ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) இழப்பீடாக பிடித்தம் செய்தது போக மீதி தொகையை வாதி பிரதிவாதிக்கு செலுத்த வேண்டியது. மேற்படி காலக்கெடுவிற்கு மேல் இந்த கிரய உடன்படிக்கையும் செல்லத்தக்கது அல்ல என்றும், இதர ஷரத்துக்களும் கண்டு எழுதப்பட்டுள்ளது.

(2.3) மேற்படி கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டபிறகு, கிரய காலக் கெடுவிற்குள் கிரய ஒப்பந்தப்படி பிரதிவாதி மீதி கிரயத் தொகையை வாதிக்கு செலுத்தி சொத்தினை கிரயம் செய்து கொள்ள முன்வரவில்லை, அதற்கான எவ்வித நடவடிக்கையும் அவர் எடுக்கவில்லை. வாதியை பிரதிவாதி சந்தித்து தனது தரப்பில் கிரயத்திற்கு தயாராக உள்ளதாகவும், கிரயம் செய்து கொள்ளும் தனது விருப்பத்தையும் நேரிலோ, எழுத்துப்பூர்வமாகவோ தெரிவிக்கவில்லை. மாறாக வாதி பிரதிவாதியை பலமுறை நேரில் சந்தித்து வாதி கிரய ஒப்பந்தப்படி மீதி கிரயத் தொகையை பெற்றுகொண்டு சொத்தினை கிரயம் செய்து கொடுக்க தயாராக உள்ளளதை தெரிவித்து வந்தும், அதனை பிரதிவாதி உதாசீனம் செய்து கொண்டே இருந்தபொழுதும் வாதி பிரதிவாதியை தொடர்ந்து அணுகி

16.08.2001 தேதிய கிரய உடன்படிக்கயை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொண்டே இருந்தார். ஆனால், பிரதிவாதி 16.08.2001 தேதியிட்ட தாவாச்சொத்தினை பொறுத்து கிரய உடன்படிக்கையை நிறைவேற்றிக் கொள்ள முன்வரவில்லை. அதனால் பிரதிவாதிக்கு 16.08.2001 தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான விருப்பம் இல்லை என்பது அவரது நடவடிக்கை மூலம் வாதியால் அறிய முடிந்தது.

(2.4) மேற்படி கிரய ஒப்பந்தத்தின் காலக்கெடுவான 12 (பன்னிரெண்டு மாதங்கள்) என்பது 16.08.2001ம் தேதியிலிருந்து 15.08.2002ம் தேதியோடு முடிவடைந்து விட்டது. அதன்பின்னிட்டு, பிரதிவாதி வாதி பேரில் நீதிமன்றத்தில் கிரய ஒப்பந்த ஷரத்துப்படி "ஏற்றதை ஆற்றுக" பரிகாரம் கோரி வழக்கு, தாக்கல் செய்யும் உரிமையை காலவரை சட்டப்படி இழந்துவிட்டார். மேலும் வாதிக்கு பிரதிவாதி செலுத்தியுள்ள கிரய முன்பணத்தை திரும்ப பெற்றுக் கொள்வதற்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு பிரதிவாதிக்கு கிரய ஒப்பந்த தேதியிலிருந்து 12 (பன்னிரெண்டு வருடங்கள்) காலக்கெடு உள்ளது. அதற்கான காலக்கெடு என்பது 12 (பன்னிரெண்டு மாதங்கள்) 16.08.2001ம் தேதியிலிருந்து 15.08.2002ம் தேதியோடு முடிவடைகிறது. வாதி பேரில் பிரதிவாதி நீதிமன்றத்தில் எவ்வித வழக்கும் மேற்படி தேதிக்குள் தாக்கல் செய்யவில்லை. அதனால், பிரதிவாதி வாதிக்கு செலுத்தியுள்ள கிரய முன்பணத்தை திரும்ப பெறும் உரிமையையும் காலவரை சட்டப்படி இழந்துவிட்டார்.

(2.5) வாதி கூறியுள்ள சங்கதிகள்படியும், குறிப்பிட்ட பரிகாரங்கள் கோரும் சட்டத்தின் சார அம்சங்கள் படியும் 16.08.2001 அன்று, வாதியும், பிரதிவாதியும் தாவாச்சொத்து பொறுத்து செய்து கொண்டுள்ள கிரய ஒப்பந்தம் கடந்த 24 (இருபத்து நான்கு) வருடங்களாக நிறைவேற்றப்படாமல் இருப்பதால் சட்டப்படி நிறைவேற்றக்கூடிய உரிமை இழந்துவிட்டது.

அதனை இனிமேற்கொண்டு சட்டப்படி நிறைவேற்ற முடியாத ஒன்றாகும். மேற்படி கிரய ஒப்பந்தம் சட்டப்படி செல்லாத ஆவணம் ஆகும். மேலும் காலாவதியானது ஆகிவிட்டது. மேற்படி 16.08.2001 தேதியிட்டு வாதியும், பிரதிவாதியும் தாவாச்சொத்து பொறுத்து செய்து கொண்டுள்ள கிரய ஒப்பந்தத்தை பொள்ளாச்சி சார்-பதிவாளர் அலுவலகத்தில் 3109/2001 நெம்பராக பதிவு செய்து கொண்டுள்ளார்கள். மேற்படி 16.08.2001 தேதியிட்ட கிரய ஒப்பந்தம் சட்டப்பூர்வமாக செல்லாத ஆவணம் ஆகிவிட்டதால் அது நிறைவேற்றபட முடியாதபடி காலாவதி ஆகிவிட்டதால் அதனை பொருத்த பதிவு பொள்ளாச்சி சார்-பதிவாளர் அலுவலகத்தில் இருந்து நீக்கறவு செய்யப்படவேண்டியது என்பதால் வாதி கடந்த 29.08.2025 அன்று பொள்ளாச்சி சார்-பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி கிரய ஒப்பந்தத்தை இரத்து செய்யுமாறு அதற்கான ஆவணத்தை கொடுத்தபொழுது அவர்கள் கிரய ஒப்பந்தம் சட்டப்படி செல்லாது என்று நீதிமன்றம் முடிவு செய்தால் மட்டுமே அதனை பதிவு செய்து கொள்ள முடியும் என்று வாய்மொழியாக கூறிவிட்டார்கள்.

(2.6) வாதி சமூகம் நீதிமன்றத்தில் வாதியும், பிரதிவாதியும் 16.08.2001 (24 வருடங்களுக்கு முன்பு) அன்று தாவாச்சொத்து பொறுத்து ஏற்படுத்திக் கொண்டுள்ள கிரய ஒப்பந்தம் சட்டப்படி செல்லாது (Void) நிறைவேற்றக்கூடியது அல்ல என்று விளம்புகை செய்யுமாறு பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனவே, சமூகம் கோர்ட்டார் கிருபை செய்து தாவாவில் வாதி கோரியுள்ளபடி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறார்.

3) பிரதிவாதி இவ்வழக்கில் வழக்கறிஞர் மூலம் ஆஜர் ஆகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினர் ஆகியுள்ளார்கள்.

**4)** வாதிகள் தரப்பில் வாதி செல்வராஜ் **வா.சா.1 ஆக** விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.6** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் தோன்றாதரப்பினர் ஆகிவிட்டார்கள்.

**5)** வாதி தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்கோள் தீர்ப்புகள்

1) 1995 -2-LW 880

2) W.P (MD) . NO. 2783/2025

**6)**இவ்வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் வாதி வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா என்பதேயாகும்.

**7) <u>தீர்வு:-</u>**

வாதி பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள தாவாவை அவரது வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியத்தின் மூலம் நிரூபித்துள்ளரா என்று பரிசீலிக்கையில் வாதி தாவாச் சொத்தினை கடந்த 16.09.1985 அன்று திருமதி.K.மணிமேகலையிடம் இருந்து வாதி கிரயம் பெற்றுள்ளார் என்பது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலிக்கையில் தாவாச்சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்பது உறுதியாகிறது. மேற்படி சொத்தை கிரையம் பெற்றபொழுது காலி மனையிடமாக கிரயம் பெற்று பின்னிட்டு, வாதி அந்த காலி மனையிடத்தில் ஒரு வில்லை வீடு தனது சொந்த செலவில் கட்டி, அதில் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார். மேற்படி வீடு அமைந்துள்ள மாக்கினாம்பட்டி ஊராட்சிக்கு வாதி பெயரில் நாளது தேதி வரை சொத்து வரி செலுத்தி வருகிறார்.

(7.2) மேலும் வாதி வீட்டிற்கு பெயரில் மின் இணைப்பும், குடிநீர் இணைப்பும் பெற்றும்,

அதன் பயன்பாட்டிற்கான கட்டணத்தையும் வாதி பெயரில் நாளது தேதி வரை செலுத்தி வருகிறார் என்பது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணத்தை பரிசீலிக்கையில் தாவாச்சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்பது உறுதியாகிறது. வாதியும், பிரதிவாதியும் கடந்த 16.08.2001 என்று தாவாச் சொத்தினை பொறுத்து விற்பனை செய்வதற்காக கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு அதனை பொள்ளாச்சி சார்-பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் எண்.3109/2009 ஆக பதிவு செய்யப்பட்டது என்பது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலிக்கையில் மேற்படி ஒப்பந்தமானது 2001ம் ஆண்டு வாதி பிரதிவாதிக்குள் ஏற்பட்டுள்ளது என்பது உறுதியாகிறது. மேற்படி கிரய ஒப்பந்தத்தின் அசலை பிரதிவாதியும், அதன் ஒளி நகலை வாதியும் வைத்துக் கொண்டார்கள். அதற்கான குறிப்பு மேற்படி கிரய ஒப்பந்தத்திலேயே எழுதப்பட்டுள்ளது.

(7.3) மேற்படி கிரய ஒப்பந்தத்தில் தாவாச்சொத்தின் கிரய மதிப்பு ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) என்றும், கிரய முன்தொகை ரூ.1,45,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்தைந்தாயிரம் மட்டும்) என்றும் கிரயத்திற்கான காலக்கெடு 12(பனிரெண்டு) மாதங்கள் என்றும், வாதிக்கு பிரதிவாதி கிரய காலக்கெடுவிற்குள் மீதி கிரயத் தொகையை செலுத்தி வாதி செலவில் சொத்தினை கிரயம் பெற்றுக்கொள்ள வேண்டியது என்றும், வாதி அதற்கான கிரயப்பத்திரத்தை எழுதி கொடுத்து வில்லங்க சுத்தியாக சொத்தினை சுவாதீனம் கொடுக்க வேண்டியது என்றும், மேலும் வாதி கிரய காலக்கெடுவிற்குள் பிரதிவாதி சொத்தினை கிரயம் செய்து கொள்ள தயாராக இருந்தும், அவருக்கு கிரயம் செய்து கொடுக்க முன்வராவிட்டால் பிரதிவாதி கிரய ஒப்பந்தத்தை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்து சொத்தினை கிரயம் செய்து கொள்ள வேண்டியது என்றும், வாதி கிரய காலக் கெடுவிற்குள் சொத்தினை பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுக்க தயாராக இருந்தும், பிரதிவாதி கிரயம் பெற்றுக் கொள்ள முன்வரவில்லை என்றால், அவர் செலுத்தியுள்ள மீதி கிரயத் தொகையில் ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) இழப்பீடாக பிடித்தம் செய்தது போக மீதி தொகையை வாதி பிரதிவாதிக்கு செலுத்த வேண்டியது. மேற்படி காலக்கெடுவிற்கு மேல் இந்த கிரய உடன்படிக்கையும் செல்லத்தக்கது அல்ல என்றும், இதர ஷரத்துக்களும் கண்டு எழுதப்பட்டுள்ளது மேற்படி ஆவணத்தை பரிசீலிக்கையில் உண்மையென உறுதியாகிறது.

(7.4) மேற்படி கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டபிறகு, கிரய காலக் கெடுவிற்குள் கிரய ஒப்பந்தப்படி பிரதிவாதி மீதி கிரயத் தொகையை வாதிக்கு செலுத்தி சொத்தினை கிரயம் செய்து கொள்ள முன்வரவில்லை, அதற்கான எவ்வித நடவடிக்கையும் அவர் கடந்த 2001ம் ஆண்டில் இருந்து இந்த தாவா தாக்கல் செய்யும் வரை மேற்கொள்ளவில்லை என்பது வாதி தரப்பு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களில் இருந்து உறுதியாகிறது. மேற்படி கிரைய ஒப்பந்தமானது சுமார் 24 ஆண்டுகளுக்கு மேலாக பிரதிவாதியால் நிறைவேற்றப்படாமல் உள்ளது என்பது வாதி தரப்பு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களில் இருந்து உறுதியாகிறது.

(7.5) மேலும் வாதியின் தரப்பை ஆட்சேபிக்கும் விதமாக பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி அவர்களது தரப்பை தகர்க்கும் விதத்தில் எவ்வித எதிர்வழக்குரையோ சாட்சியமோ அளிக்காமல் தோன்றாத்தரப்பினராகியுள்ள நிலையில் வாதியின் கூற்று வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம்

உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது-

**<u>முடிவில்,</u> வழக்கு அனுமதிக்கப்பட்டு வாதியும் பிரதிவாதியும் தாவாச்சொத்து பொறுத்து 16.08.2001 தேதியன்று செய்து கொண்டுள்ள கிரைய ஒப்பந்தம் சட்டப்படி செல்லாது நிறைவேற்றகூடியது அல்ல என்று ஒரு விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAMACHANDRAN SUJATHA

Digitally signed by RAMACHANDRAN SUJATHA
Date: 2026.04.12 10:26:45 +0700

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

**<u>வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் பட்டியல்</u>:**

வா.சா.1 செல்வராஜ் (வாதி)

**<u>வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் பட்டியல்</u>:**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 16.09.1985 | வாதி பெயரில் உள்ள கிரயப்பத்திரம் - சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 16.08.2001 | வாதியும், பிரதிவாதியும் செய்து கொண்டுள்ள கிரய ஒப்பந்தம் - சான்றிட்டந கல் |
| வா.சா.ஆ.3 | 08.02.2025 | வாதி பெயரில் உள்ள சொத்து வரி ரசீது - இணையவழி நகல் |
| வா.சா.ஆ.4 | 08.02.2025 | வாதி பெயரில் உள்ள தண்ணீர் கட்டணம் செலுத்தியதற்கான ரசீது - இணையவழி நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | | வாதியின் ஆதார் அட்டை - அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| வா.சா.ஆ.6 | 08.09.2025 | வில்லங்க சான்றிதழ் -இணையவழி நகல் |

**பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்**

— இல்லை -

RAMACHANDRAN SUJATHA

Digitally signed by RAMACHANDRAN SUJATHA
Date: 2026.04.12 10:26:51 +0700

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

---

**அசல் / வரைவு தீர்ப்புரை**

அ.வ.எண். 207/2025

தேதி : 15.04.2026

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

பொள்ளாச்சி

---